அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

வேளாண் ஆராய்ச்சி நிலையம்

***37312 திரு. இரா. துரைக்கண்ணு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பாபநாசம் தொகுதியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

2014 பிப்ரவரி 18]

திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் பிப்ரவரி 24 ஆம் தேதி 66-வது பிறந்தநாள் காணும் கழகத்தின் காவல் தெய்வம், ஏழையெளிய மக்களின் கண்கண்ட தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் இதழில் வெளியிடச் செய்து காவேரி டெல்டா விவசாயிகளின் உரிமையை மீட்டுத் தந்த தமிழக வீராங்கனை, தமிழகத்தில் கல்விப் புரட்சி, இரண்டாம் பசுமைப் புரட்சி ஆகியவற்றை படைத்திட்ட வரலாற்றுத் தலைவி, இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக திகழ்கின்ற வகையில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கிய விவசாயிகளின் பாதுகாவலர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை நன்றியுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாபநாசம் தொகுதி முற்றிலும் விவசாயத்தைச் சார்ந்த பகுதியாகும். இங்கு நெற்பயிரும், கரும்பும் முழு அளவில் விளைகின்றன. எனவே, விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று அங்கே வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைத்துத்தர மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அதனை நிறைவேற்றித் தருவார்களா என்று மீண்டும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் பாபநாசத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவிலும், தஞ்சாவூரில் இயங்கும் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம் அங்கிருந்து 33 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளன. அவை அப்பகுதி விவசாயிகளின் தேவைக்கேற்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், அவ்வப்போது சந்தேகங்களை நிவர்த்தி செய்தும், தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளின் பயிர் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து உரிய ஆலோசனைகளை வழங்குவதற்காக தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை மற்றும் வேப்பங்குளம் ஆகிய

இடங்களில் எண்ணெய் பனை மற்றும் தென்னை ஆகிய பயிர்கள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அருகில் உள்ள மாவட்டங்களில் செயல்படுகின்ற நீடாமங்கலம் மற்றும் சிக்கல் வேளாண் அறிவியல் மையங்கள் விவசாயிகளுக்கு தொழில்நுட்பம் தொடர்பான வழிகாட்டுதல் மற்றும் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. எனவே, பாபநாசத்தில் உடனடியாக புதிதாக வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள்.*

திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டிலாவது என்னுடைய கோரிக்கையினை நிறைவேற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவையிருப்பின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளமான கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை வளர்ச்சி தற்போது குன்றி இருக்கின்றது என்பதை நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பல அணைகள் அங்கு இருந்தாலும், நீர் வளங்கள் அங்கு இருந்தாலும் பயிர்களை பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகள் அங்கு சரியாக இல்லை*

2014 பிப்ரவரி 18]

என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அங்கு பேச்சிப்பாறையில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இருக்கின்றது. அதனை நன்கு develop செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கோரிக்கை குறித்து முழுமையாக ஆராய்ந்து அதுபற்றி பின்னர் முடிவெடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

68—

புதிய கட்டடம்

***3922 திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, கவுண்டம்பாளையத்திலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கவுண்டம்பாளையம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் திறன்மிகு பயிற்சி மையத்திற்கென ரூ.16 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும்,